මගේ අංකය / எனது இல. / My No. EP/3/1/R1/27/2021
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 28.04.2022

# ஊடக அறிவிப்பு

## தேசிய கல்வியல் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குதல்
## கிழக்கு மாகாண சபை

2017/2019 கல்வி ஆண்டுகளில் தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறிச் செல்லும் போதனாவியல் டிப்ளோமாதாரிகளுக்காக எதிர்வரும் 2022.05.04 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியமனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மாகாணத்தின் பாடசாலைகளில் நியமனம் பெறவுள்ள டிப்ளோமாதாரிகள் தங்களது நியமனம் தொடர்பான தகவல்களை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://ep.gov.lk/en/minieducationindex ஊடாக அறிந்து கொள்ளலாம்.

நாட்டின் தற்போதைய நிலைமையின் படி நியமனம் வழங்குதல் தொடர்பான விழாவை நடாத்துவதற்கான தீர்மானம் எடுக்கப்படாமையினால் நியமனதாரிகள் இவ்வமைச்சிற்கு அழைக்கப்பட்டு நியமன கடிதங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்நியமன கடிதங்கள் வழங்குவது தொடர்பில் 2022.05.02 ஆம் திகதி மு.ப. 9.30 ற்கு உட்துறைமுக வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண கல்வி அமைச்சிலே நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதால் சகல நியமனம் பெறுபவர்களும் நேரில் (தனிப்பட்ட முறையில் சமுகம் தந்து தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டு (தேசிய அடையாள அட்டை / சாரதி அனுமதிப் பத்திரம் / வெளிநாட்டு பயணக் கடவுச்சீட்டு) நியமனக் கடிதத்தை பெற்றுக் கொள்ள முடியும். அவர்களுக்கு பதிலாக சமுகம் தரும் பிரதிநிதிகளுக்கு நியமனக் கடிதம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்படவில்லை. என்பதுடன், தவிர்க்க முடியாத காரணத்திற்காக சமுகம் தர முடியாதவர்களுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய ஒருவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட கடிதத்துடன் அடையாளத்தை உறுதிப்படுத்தினால் மட்டும் நியமனக் கடிதத்தை பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் தொலைந்துபோகும் நியமனக் கடிதங்கள் சம்பந்தமான (தொடர்பாக) இவ் அமைச்சு எந்தவித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளாது.

H.E.M.W.G. திஸாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு,
கிழக்கு மாகாணம்.

H.E.M.W.G. DISSANAYAKE
Secretary
Ministry of Education, IT Education, Pre - School Education
Sports, Cultural Affairs, Youth Affairs and
Rehabilitation & Resettlement
Eastern Province

Inner Harbour Road,
Trincomalee.
General : 026 – 2222176
Fax : 026 – 2222730
Asst. Secretary : 026 – 2052110
AO : 026 – 2223223

உட்துறைமுக வீதி,
திருகோணமலை
Secretary : 026 – 2220035
Accountant : 026 – 2221015
Dire. of School Works : 026 – 2220087
Email : mineducation@ep.gov.lk

ඇතුල් වරාය පාර,
ත්‍රිකුණාමලය
Senior Asst. Secretary : 026 – 2224023
Dire. of Planning : 026 – 2222723
Deputy Dire. of Edu. : 026 – 3135501